Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | | |
|---|---|---|---|
| Calendar | .. .. | } | |
| Miscellaneous | .. .. | } | |
| Preliminary Register | .. .. | } | **S.C. 144/2024** |
| Sessions | .. .. | } | |
| | | } | Prosecution – **PW7** |
| Deposition of witness for | | } | Defence – |
| | | } | Court – |

| | | |
|---|---|---|
| Name | : | நிரூபன் |
| Husband Name | : | மகேஸ்வரன் |
| Village | : | மண்டபம் முகாம் |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | 31 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 07.03.2026

( 1, 3 எதிரிகள் ஆஜரில்லை, 1, 3 எதிரிகள் தரப்பில் BNSS-355ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. மற்ற எதிரிகள் ஆஜர்)

**முதன்மை விசாரணை:-**

நான் மண்டபம் முகாமில் வசித்து வருகிறேன். அ.சா.1 நிரோஜன் என் அண்ணன். சாட்சிகள் தசாந்தன், திவாகரன், நீட் அனுஜன், ரிசியாந்தினி, முகாந்தினி ஆகியோர்களை தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். நீதிமன்றத்தில் ஆஜராகாகத களஞ்சியராஜா மற்றும் நாகார்ஜீனா ஆகியோர்களை தெரியும். எதிரிகள் அனைவரும் எங்களுடன் மண்டபம் கேம்பில் தங்கியிருந்தார்கள். கடந்த 21.02.2024ம் தேதி மதியம் 02.45 மணியளவில் நான், என் அண்ணன் நிரோஜன், தசாந்தன் ஆகிய மூவரும் மண்டபம் கேம்ப்பில் உள் ளகோபால் கடைக்கு எதிரே நின்று பேசிக்கொண்டிருந்தோம். அப்போது எங்களை நோக்கி ஓடிவந்த களஞ்சியராஜா, அவரது அப்பா மகேந்திரன்,

நாகார்ஜீனா, முத்துக்குமார் மற்றும் நந்தகோபால் ஆகியோர்கள் களஞ்சிய ராஜா கையில் வைத்திருந்த வீல்ஸ்பானரால் தேவுடியா பயல்களா என்று சொல்லிக்கொண்டே என் தலையில் அடித்தார். பின்பு களஞ்சியராஜாவின் அப்பா மகேந்திரன் கையில் வைத்திருந்த அருவாளால் எனது தலையிலும், கழுத்திலும், வலது கண்ணிலும் சராமாரியாக வெட்டினார். இத்தோடு தொலைந்துபோங்கடா என்று மாறிமாறி வெட்டினார். பிறகு முத்துக்குமார், நந்தகோபால், நாகார்ஜீனா ஆகியோர்கள் காலாலும், கையாலும் என்னையும், என் அண்ணனையும் மாறிமாறி மிதித்தார்கள். எதிரிகள் தாக்குவதிலிருந்து என்னை காப்பாற்றுவதற்கு என் அண்ணன் நிரோஜன் வந்தார். அப்போது களஞ்சியராஜா கையில் வைத்திருந்த வீல்ஸ்பானைரை வைத்து முதுகில் தாக்கினார். களஞ்சியராஜாவின் அப்பா மகேந்திரன் அருவாளை வைத்து என் அண்ணனின் முதுகிலும், விலாவிலும் வெட்டினான். நான் அந்த இடத்திலேயே மயக்கம்போட்ட நிலைக்கு வந்துவிட்டேன். அங்கிருந்த தசாந்தன், நீட் அனுஜன், திவாகரன், ரிசியாந்தினி, முகுந்தினி மற்றும் அக்கம்பக்கத்தில் கடை வைத்திருந்த நபர்கள் வந்தார்கள். காயம்பட்டு கிடந்த என்னையும், என் அண்ணனையும் தசாந்தனின் ஆட்டோவில் மண்டபம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக கொண்டு சென்றார்கள். அங்கு என்னை பரிசோதித்த மருத்துவர் இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லச்சொன்னார்கள். அங்கு எனக்கு தலையில் ஏற்பட்ட காயத்திற்கு மட்டும் தையல் போடப்பட்டு, எனது கண்ணில் ஏற்பட்ட காயத்திற்கு மதுரை ராஜாஜி மருத்துவமனைக்கு என்னை அழைத்து சென்றார்கள். அங்கு என்னை பரிசோதித்த மருத்துவர் கண்ணை எடுக்க வேண்டும் என்று சொன்னதின்பேரில் எனது கண்ணை அறுவை சிகிச்சை செய்து எடுத்துவிட்டார்கள். பின்னர் என்னை மேல்சிகிச்சைக்காக மதுரை மீனாட்சி மிஷன் மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்த்தார்கள். அங்கு நான் ஒருமாதகாலம் சிகிச்சை எடுத்துக்கொண்டேன். எனது அக்கா மஞ்சுளா என்பவது மகன் அபிசாந்தன் அவன் உடன் படித்த பெண் வத்சா என்பவருடன் நண்பராக பழகி வந்தார். அப்போது எதிரி நந்தகோபால் என் அக்கா பையன் அபிசாந்தனை கூப்பிட்டு நான் விரும்பும் பெண்ணுடன் நீ ஏன் பேசுகிறாய் என்று கேட்டு என் அக்கா மகனை தலையிலும், காலிலும் இரத்தம்வரும் அளவிற்கு காயத்தை ஏற்படுத்திவிட்டார். எனது அக்கா பையனை 20.02.2024ம் தேதி அடித்துள்ளார். அன்று இரவு நான் நந்தகோபாலிடம்

போய் நாங்கள் அனைவரும் ஒரே கேம்பில்தானே இருக்கிறோம் ஏன் பிரச்சனை செய்கிறாய் என்று கேட்டேன். நான் கேட்டதின் விளைவாக நந்தகோபாலின் நண்பர்கள் சேர்ந்து கொண்டு என்னை தாக்கிவிட்டார்கள். நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் வீல்ஸ்பானைரைவைத்துத்தான் என்னையும், என் அண்ணனையும் களஞ்சியராஜா தாக்கினார். நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் அருவாளால்தான் என்னையும், என் அண்ணன் நிரோஜனையும் மகேந்திரன் தாக்கினார். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>:– இல்லை.

Sd/-சி.மோகன்ராம்,
கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.

Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | | |
|---|---|---|---|
| Calendar | .. .. | } | |
| Miscellaneous | .. .. | } | |
| Preliminary Register | .. .. | } | **S.C. 144/2024** |
| Sessions | .. .. | } | |
| | | } | Prosecution – **PW6** |
| Deposition of witness for | | } | Defence – |
| | | } | Court – |

| | | |
|---|---|---|
| Name | : | முகுந்தினி |
| Husband Name | : | ராஜேஸ் |
| Village | : | மண்டபம் முகாம் |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | 36 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 07.03.2026

( 1, 3 எதிரிகள் ஆஜரில்லை, 1, 3 எதிரிகள் தரப்பில் BNSS-355 ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. மற்ற எதிரிகள் ஆஜர்)

**முதன்மை விசாரணை:-**

நான் மண்டபம் முகாமில் குடியிருந்து வருகிறேன். கூலிவேலை பார்த்து வருகிறேன். இந்த வழக்கில் காயம்பட்ட நிரூபன், நிரோஜன் மற்றும் சம்பவ சாட்சிகளாக தசாந்தன், திவாகரன், நியூட் அனுஜன், ரிசியாந்தினி ஆகியோர்களை தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். இன்று நீதிமன்றத்தில் ஆஜராகாத எதிரிகளான களஞ்சியராஜா, நாகார்ஜீன் தெரியும். கடந்த 21.02.2024 ம் தேதி மதியம் 02.45 மணியளவில் மண்டபம் கேம்ப்புக்கு வெளியில் உள்ள கோபால் கடைக்கு எதிரே உள்ள ரோட்டில் நிரூபன், நிரோஜன், தசாந்தன் ஆகீயோர்கள் பேசிக்கொண்டிருந்தார்கள். அப்போது அங்கு வந்த எதிரிகள் களஞ்சியராஜா, அவரது அப்பா மகேந்திரன், நாகார்ஜீனா,

நந்தகோபாலன், முத்துக்குமார் ஆகிய 5 பேரும் அங்கு வந்தார்கள். களஞ்சியராஜா நிரூபனையும், நிரோஜனையும் பார்த்து அங்கே நிக்கிராங்கடா தேவுடியா பசங்க அவங்களை அடிச்சே கொல்லுங்கடா என்று சொல்லிக்கொண்டோ, கையில் வைத்திருந்த வீல்ஸ்பேனரால் நிரூபனின் தலையில் அடித்தார். களஞ்சியராஜாவின் அப்பா மகேந்திரன் கையில் வைத்திருந்த அருவாளால் நிரூபனின் வலதுகண், இடது கழுத்து மற்றும் தலை ஆகிய இடங்களில் சராமாரியாக வெட்டினார். நிரூபனை காப்பாற்ற வந்த நிரோஜனை களஞ்சிய ராஜா கையில் வைத்திருந்த ஸ்பானரால் முதுகில் அடித்தார். மகேந்திரன் கையில் வைத்திருந்த அருவாளால் நிரோஜனின் முதுகிலும், விலாஎலும்பிலும் வெட்டினார். நந்தகோபாலன், முத்துகுமார், நாகார்ஜீனா ஆகியோர்கள் நிரூபனையும், நிரோஜனையும் கையாலும், காலாலும் மிதித்து இத்தோடு செத்து தொலைங்கடா என்று தாக்கினார்கள். அப்போது ரிசியாந்தினி, நீட் அனுஜன், தசாந்தன், திவாகரன் மற்றும் நான் ஆகீயோர்கள் விடச்சொல்லி விலக்கப்போனோம். அப்போது களஞ்சியராஜா எங்களிடம் வைத்துக்கொண்டால் இதேநிலைதான் என்று சொல்லிக்கொண்டு சென்றுவிட்டார்கள். சம்பவ இடத்தில் நிரூபன் மயங்கி விழுந்துவிட்டார். மண்டபம் கேம்பை சேர்ந்த தசாந்தன் என்பவரது ஆட்டோவில் காயம்பட்ட நிரூபனையும், நிரோஜனையும் சிகிச்சைக்கு மண்டபம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். என்னிடம் தற்போது நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் வீல்ஸ்பானரை வைத்துதான் நிரூபனையும், நிரோஜனையும் தாக்கினார். நீதிமன்றத்தில் தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் அருவாளை வைத்துத்தான் எதிரி மகேந்திரன் நிரூபனையும், நிரோஜனையும் தாக்கினார். இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>:– இல்லை.

Sd/-சி.மோகன்ராம்,<br>
கூடுதல் மாவட்ட நீதிபதி,<br>
இராமநாதபுரம்.

Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | |
|---|---|---|
| Calendar .. .. | } | |
| Miscellaneous .. .. | } | |
| Preliminary Register .. .. | } | **S.C. 144/2024** |
| Sessions .. .. | } | |
| | } | Prosecution – **PW5** |
| Deposition of witness for | } | Defence – |
| | } | Court – |

| | | |
|---|---|---|
| Name | : | நியூட் அனுஜன் |
| Father/Husband Name | : | பங்கிராஜா |
| Village | : | மண்டபம் முகாம் |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | 34 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 07.03.2026

( 1, 3 எதிரிகள் ஆஜரில்லை, 1, 3 எதிரிகள் தரப்பில் BNSS-355ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. மற்ற எதிரிகள் ஆஜர்)

**முதன்மை விசாரணை:-**

நான் மண்டபம் முகாமில் குடியிருந்து வருகிறேன். நான் டிரைவராக வேலை பார்த்து வருகிறேன். இந்த வழக்கில் காயம்பட்ட நிரூபன், நிரோஜன் மற்றும் சம்பவ சாட்சிகளாக தசாந்தன், நிஷாந்தினி, முகுந்தினி ஆகியோர்களை தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். இன்று நீதிமன்றத்தில் ஆஜராகாத எதிரிகளான களஞ்சியராஜா, நாகார்ஜீன் தெரியும். கடந்த 21.02.2024ம் தேதி மதியம் 02.30 - 03.00 மணியளவில் நான் மண்டபம் முகாமில் உள்ள கோபால்கடைக்கு எதிரே நின்று பேசிக்கொண்டிருந்தேன். அப்போது கோபால்கடைக்கு எதிரே நிரூபனும், நிரோஜனும் நின்று பேசிக்கொண்டிருந்தார்கள். அப்போது எதிரிகளான களஞ்சியராஜா மற்றும்

அவரது அப்பா மகேந்திரன், நந்தகோபால், நாகார்ஜீனா, முத்துக்குமார் ஆகியோர்கள் வேகமாக இருசக்கரவாகனத்தில் வந்து இறங்கி நிரூபனை வீல்ஸ்பானரை வைத்து களஞ்சியராஜா நிரூபனை தலையில் தாக்கினார். களஞ்சியராஜாவின் அப்பா மகேந்திரன் அவர் கையில் வைத்திருந்த அருவாளால் நிரூபனை இதோடு செத்துதொலைடா என்று சொல்லி வலதுகண்ணிலும், இடது கழுத்திலும், தலையிலும் சராமாரியாக வெட்டினார், இதை தடுக்க வந்த அவரது அண்ணன் நிரோஜனை களஞ்சியராஜா கையில் வைத்திருந்த வீல் ஸ்பானரால் முதுகு மற்றும் விலாஎலும்பில் தாக்கினார். மகேந்திரன் தன் கையில் வைத்திருந்த அருவாளால் நிரோஜனின் முதுகில் வெட்டினார். அவர்களுடன் இருந்த நந்தகோபால், முத்துக்குமார், நாகார்ஜீனா ஆகியோர்கள் நிரூபனையும், நிரோஜனையும் கையால் அடித்தும், காலால் மிதித்தனர். அதில் நிரூபன் சுயநினைவு இன்றி கீழே விழுந்துவிட்டார். காயம்பட்டு கிடந்த நிரூபனையும், நிரோஜனையும் திவாகரகன், தசாந்தன் மற்றும் நான் ஆகியோர்கள் தசாந்தனின் ஆட்டோவில் மண்டபம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். அங்கு பரிசோதனை செய்த மருத்துவர் காயம் தீவிரமாக இருப்பதால் இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்ல சொன்னதால் ஆம்புலன்சில் கொண்டு சென்றார்கள். இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் கழுத்து மற்றும் தலையில் தையல் போடப்பட்டது. நாங்கள் அவர்கள் குடும்பத்தார்கள் வந்த உடன் அவர்களை விட்டுவிட்டு வந்துவிட்டோம். எதிரிகள் எல்லோரும் எங்கள் வீட்டிற்கு அருகில் வசிப்பவர்கள் என்பதால் தெரியும். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>:– இல்லை.

Sd/-சி.மோகன்ராம்,
கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.